தகவல்



உங்கள் உடல்நலம் மற்றும் பொது மற்றும் தனிப்பட்ட விருப்பங்கள் போன்ற பல்வேறு சேவைகளைப் பற்றிய தெளிவான தகவலைப் பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

எந்தவொரு சிகிச்சையையும் மேற்கொள்வதற்கு முன் நீங்கள் தகவலறிந்த ஒப்புதல் அளிக்க வேண்டும். இதன் பொருள் உங்கள் சிகிச்சை விருப்பத் தெரிவுகள், சாத்தியமான நன்மைகள் மற்றும் அபாயங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றை நீங்கள் முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் சுகாதாரப் பராமரிப்பு விருப்பத் தெரிவுகள், எங்கு செல்ல வேண்டும், காத்திருக்கும் நேரம் மற்றும் நீங்கள் எதற்கும் பணம் செலுத்த வேண்டும் என்பது பற்றிய தகவல் உங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

உங்கள் சுகாதாரப் பராமரிப்பின் போது ஏதேனும் தவறு நடந்தால், அதைப் பற்றி தெரிவிக்கப் பட்டிருக்கவும் உங்களுக்கு உரிமை உண்டு. என்ன நடந்தது, நீங்கள் எவ்வாறு பாதிக்கப்படலாம் மற்றும் பராமரிப்பைப் பாதுகாப்பானதாக்க என்ன செய்யப்படுகிறது என்பதை சுகாதார சேவை விளக்க வேண்டும்.

தனியுரிமை



உங்கள் தனியுரிமையை மதிக்கப்பட உங்களுக்கு உரிமை உண்டு. இதில் உங்கள் உடலின் தனியுரிமை, உடமைகள், தகவல் மற்றும் தனிப்பட்ட இடம் ஆகியவை அடங்கும்.

உங்கள் தனிப்பட்ட மற்றும் மருத்துவ தகவல்கள் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் வைக்கப்பட வேண்டும்.

கருத்து தெரிவிக்கவும்

கருத்து தெரிவிக்க அல்லது புகார் அளிக்க உங்களுக்கு உரிமை உள்ளது. உங்கள் கரிசனைகள் வெளிப்படையாகவும் நியாயமான காலக்கெடுவுக்குள் தீர்க்கப்பட வேண்டும். கருத்து அல்லது புகாரை வழங்குவது, நீங்கள் நடத்தப்படும் விதத்தை எதிர்மறையாக பாதிக்கக்கூடாது.

உங்கள் அனுபவங்களைப் பகிர்வதன் மூலம் சுகாதாரப் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்த முடியும்.

உங்கள் உரிமைகள் பேணப்படவில்லை என நீங்கள் கரிசனைகொண்டால், உங்கள் மருத்துவர் அல்லது சுகாதார சேவை நிறுவனத்துடன் கலந்துரையாடவும். உங்களால் இதைச் செய்ய முடியாவிட்டால் அல்லது அவர்களின் பதிலில் திருப்தி இல்லை என்றால், உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்தில் உள்ள சுகாதார புகார்கள் அமைப்பைத் தொடர்பு கொள்ளவும்.

சாசனம் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு அல்லது சுகாதார புகார் அமைப்புகளுக்கான தொடர்பு விவரங்களுக்கு, இந்த இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்:

www.safetyandquality.gov.au/your-rights

Level 5, 255 Elizabeth Street
Sydney NSW 2000

GPO Box 5480
Sydney NSW 2001

தொலைபேசி: (02) 9126 3600
mail@safetyandquality.gov.au

safetyandquality.gov.au

இதனை ஸ்கேன் செய்யவும்

AUSTRALIAN COMMISSION ON SAFETY AND QUALITY IN HEALTH CARE

டிசம்பர் 2023

எனது சுகாதாரப் பராமரிப்பு உரிமைகள்

TAMIL | தமிழ்

AUSTRALIAN COMMISSION ON SAFETY AND QUALITY IN HEALTH CARE

ஆஸ்திரேலிய சுகாதார உரிமைகள் சாசனத்தில் (சாசனம்) Australian Charter of Healthcare Rights (The Charter) விவரிக்கப்பட்டுள்ளபடி, பாதுகாப்பான மற்றும் உயர்தர சுகாதாரப் பராமரிப்புக்கான உரிமை உங்களுக்கு உள்ளது.

நீங்கள் அல்லது நீங்கள் பராமரிக்கும் ஒருவர் சுகாதாரப் பராமரிப்புப் பெறும்போது என்ன எதிர்பார்க்கலாம் என்பதை சாசனம் விளக்குகிறது.

ஆஸ்திரேலியாவில் சுகாதார பராமரிப்பு வழங்கப்படும் எல்லா இடங்களிலும் உரிமைகள் அனைவருக்கும் பொருந்தும் .

உங்கள் உரிமைகளைப் வாசித்துப் புரிந்து கொள்ள நேரம் ஒதுக்குங்கள்.

அணுகல்

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சுகாதாரப் பராமரிப்பைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு.

மெடிகேர், மருத்துவரைப் பார்ப்பதற்கான செலவுகள் மற்றும் பல சிகிச்சைகள் மற்றும் மருந்துகளுக்கு உதவுகிறது. நீங்கள் சிகிச்சை பெறுவதற்கு முன், நீங்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஏதேனும் உள்ளதா என்பதை அறிய உங்களுக்கு உரிமை உள்ளது.

சுகாதார சேவை நிறுவனங்கள், ஊனமுற்றவர்கள் அதன் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான சூழலை வழங்க வேண்டும்.

பாதுகாப்பு

தேசியத் தரங்களைச் சந்திக்கும் பாதுகாப்பான மற்றும் உயர்தர சுகாதாரப் பராமரிப்பைப் பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

உங்கள் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சிகிச்சையானது கிடைக்கக்கூடிய சிறந்த சான்றுகள் அடிப்படையில் மற்றும் உங்கள் தேவைகள் மற்றும் விருப்பத்தெரிவுகளின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

உங்கள் உடல்நலம் குறித்து நீங்கள் கவலை கொண்டிருந்தால், கவலையளிக்கும் மாற்றத்தை உங்களில் கவனித்தீர்கள் என்றால் அல்லது எதோவொன்று கண்டறியப்படவில்லை போன்று எண்ணினால், உங்களை மறு ஆய்வுக்கு உட்படுத்துமாறு கேட்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

மரியாதை

நீங்கள் கண்ணியத்துடனும், மரியாதையுடனும், இரக்கத்துடனும் நடத்தப்பட உங்களுக்கு உரிமை உண்டு.

உங்கள் தேவைகளைப் பற்றி உங்களிடம் கேட்கப்பட வேண்டும், உங்கள் பராமரிப்பு உங்கள் விருப்பங்களைப் பிரதிபலிக்க வேண்டும்.

பங்கான்மை

உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குனருடன் ஒரு பங்காளராககருதப்படுவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. நீங்கள் எத்தனை கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கலாம். உங்கள் மருத்துவர் உங்கள் சுகாதாரப் பராமரிப்புக் குறித்து வெளிப்படையாகவும் நேர்மையாகவும் உங்களுடன் பேச வேண்டும்.

குடும்பம், நண்பர்கள், பராமரிப்பாளர் அல்லது நுகர்வோர் சட்டத்தரணி போன்ற மற்றவர்களை உங்கள் பராமரிப்புத் திட்டத்தில் நீங்கள் சேர்த்துக்கொள்ளலாம்.